

...ல்லூரியில் தமிழ்ப் புதல்வன் திட்டம் துவக்க விழாவில் அனைத்து ...ணவிகளுக்கு ரூ.3 கோடியே 61 லட்சம் மதிப்பிலான வங்கி கடன் ...பாருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார். ...உறுப்பினர்கள் மதியழகன், ஒய்.பிரகாஷ், மாவட்ட ஊராட்சி குழு ...இந்தியன் வங்கி முன்னோடி வங்கி மேலாளர் சரவணன் உள்ளிட்ட

# சுதந்திர தினத்தையொட்டி நாளை மதுக்கடைகள் மூடல்!

சென்னை, ஆக.14—

சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே வெளியிட்ட செய்திக் குறிப்பு: சுதந்திர தினமான வியாழக்கிழமை (ஆக.15) சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து மதுபான சில்லறை விற்பனை கடைகள் மற்றும் அதனைச் சார்ந்த பார்கள், உரிமம் கொண்ட கிளப்புகள் மற்றும் அதனைச் சார்ந்த பார்கள் அனைத்தும் கண்டிப்பாக மூடப்பட வேண்டும். எவ்விதத்திலும் குறிப்பிட்ட நாளன்று மதுபானம் விற்பனை செய்யக்கூடாது. இந்த உத்தரவை மீறி மதுபானம் விற்பனை செய்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார் ஆட்சியர்.

# ...வர் கொலைவழக்கில்...

இதனிடையே திரிணாமூல் காங்கிரஸ் எம்.எல்.ஏ. சவுமென் மகாபத்ராவின் மகனுக்கு பெண் மருத்துவர் கொலையில் தொடர்பு இருப்பதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. இது தொடர்பான ஒரு சமூக வலைத்தளப் பதிவு வைரலானதைத் தொடர்ந்து பலரும் சந்தேகம் எழுப்பி வருகின்றனர். ஆனால் இந்த குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்துள்ள எம்.எல்.ஏ. மகாபத்ரா கூறியதாவது, நிறைய பேர் பெண் மருத்துவர் கொலையில் என் மகனுக்கு தொடர்பு உள்ளதா என்று தொலைபேசி அழைப்பில் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

சொந்த கட்சியிலேயே சிலர் வேண்டுமென்றே என் மகனை இந்த வழக்கில் சிக்க வைக்க முயற்சி செய்கிறார்கள். என் மகன் அப்பாவி, அவனுக்கு இதில் எந்த தொடர்பும் இல்லை என்று கூறினார். எம்.எல்.ஏ.வின் மனைவி சுமானா, பன்ஸ்குரா நகர திரிணாமுல் காங்கிரஸ் தலைவராக உள்ளார்.

தன் மகன்மீதான குற்றச்சாட்டு குறித்து பதில் அளித்த சுமானா கூறியதாவது, எங்கள் கட்சியினரே சொந்த காழ்ப்புணர்ச்சி காரணமாக, பெண் மருத்துவர் கொலையில் என் மகன் பெயரை இழிவுபடுத்த நினைக்கின்றனர். என் மகனும் ஒரு மருத்துவர் என்பதால் தான் இப்படி ஒரு கதை கட்டி விட்டுள்ளனர். தேவைப்பட்டால் நாங்கள் விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைப்போம். ஒருவேளை என் மகனே குற்றவாளி என்றாலும் கூட, நானே அவனை போலீஸில் பிடித்துக் கொடுப்பேன் இவ்வாறு அவர் கூறினார்.

பெண் மருத்துவர் இறந்த சமயத்தில் பெற்றோரைக் கூட பார்க்க விடாமல் மருத்துவமனைக்கு வெளியே மூன்று மணி நேரம் அவர்களைக் காக்க வைத்தது பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. முதலில் பெண் மருத்துவர் தற்கொலை செய்து கொண்டதாக தவறான தகவல் அளித்த மருத்துவமனை உதவி சூப்பிரண்டுக்கு ஏற்கனவே விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. கொலை நடந்த அரசு மருத்துவமனை முதல்வர் தன் பதவியை ராஜினாமா செய்த நிலையில் அடுத்த நோட்டீஸ் வரும் வரை அவரை நீண்ட விடுப்பில் செல்லுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனிடையே நாடு முழுவதும் பெண் மருத்துவர் கொலைக்கு நியாயம் கேட்டு மருத்துவர்கள் போராட்டம்தீவிரமடைந்துள்ளது. கொல்கத்தா, மும்பை, டெல்லி உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் அவசர சிகிச்சைப் பிரிவைத் தவிர, மற்ற அனைத்து மருத்துவ சேவைகளையும் புறக்கணித்து மருத்துவர்கள் தீவிர போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

இந்திய மருத்துவ கூட்டமைப்பின் பிரதிநிதிகள், இன்று காலை கொல்கத்தா அரசு மருத்துவமனைக்கு வருகை புரிந்து மருத்துவர்கள், மாணவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். மேலும் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியையும் அவர்கள் சந்தித்துப் பேசினர். மத்திய பாதுகாப்புச் சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று மருத்துவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தற்போது கைதாகி நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ள கொலையாளி சஞ்சய் ராய், மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் பல பெண்களுக்கு தொடர்ந்து பாலியல் தொல்லை கொடுத்து வந்தது விசாரணையில் தெரிய வந்துள்ளது. 3 மாதங்களுக்கு முன்பு ஒரு குடும்ப பெண்மணி, உடல்நிலை சரியில்லாத தன் மகனுக்கு சிகிச்சை அளிக்க அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார். அப்போது, மருத்துவமனையில் காவல் பணியில் இருந்த சஞ்சய் ராய், அந்த பெண்மணிக்கு மருந்துகள் வாங்க உதவி செய்துள்ளார். அப்போது மருந்து சீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த பெண்ணின் செல்போன் நம்பரை குறித்து வைத்துக் கொண்ட சஞ்சய் ராய், அதன் பிறகு தினமும் அந்த பெண்மணிக்கு போன் செய்து ஆபாசமாக பேசி பாலியல் ரீதியாக தொல்லை கொடுத்துள்ளான். இதே போன்று பல பெண்களுக்கு வலை விரித்து, சஞ்சய் ராய் தனது காம இச்சைகளை தீர்த்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. தொடர்ந்து அவனிடம் விசாரணை நடைபெற்று வரும் நிலையில், இந்த ...

# ...அணை ...நிலவரம்!

மேட்டூர், ஆக. 4—

...ரத்து சற்று குறைந்தது. ...ரம் வருமாறு:— ...000 கன அடியிலிருந்து ...துள்ளது.

...ஆற்றில் வினாடிக்கு ...மேற்கு கால்வாய் பாசன ...வெளியேற்றப்படுகிறது. ...ல் மழை குறைந்ததால் ...கேனக்கல் நீர்வரத்து ...ல 42 ஆயிரம் கனஅடி ...காலை 8 மணி நிலவ...ாக குறைந்துள்ளது.



# ஜம்மு- காஷ்மீரில் பதுங்கியிருந்த 9 தீவிரவாதிகள் கைது!

ஸ்ரீநகர், ஆக.14—

ஜம்மு— காஷ்மீரின் கண்டோ பகுதியில் பதுங்கியிருந்த 9 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

ஜம்மு—காஷ்மீரின் கண்டோ பகுதியில் தேடுதல் வேட்டையை அண்மையில் நடத்திய போலீஸார்இவர்களைக் கைது செய்துள்ளனர். இத்தகவலை ஜம்முகாஷ்மீர் போலீஸார் உறுதி செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் முகமது லத்தீப் முக்கிய குற்றவாளியாக கருதப்படுகிறார். அதாவது இந்த தீவிரவாத குழுவின் கமாண்டர் போல செயல்பட்டு வருகிறார். இவர்கள்அனைவரும்தற்போது கைது செய்யப்பட்டு போலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து ஜம்முகாஷ்மீர் மூத்த போலீஸ் அதிகாரி ஒருவர் கூறும்போது, "இந்த தீவிரவாத அமைப்பின் முக்கியக் குற்றவாளி லத்தீப்பும், அவருடைய கூட்டாளிகள் 8 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள்தான் வெளிநாட்டுத் தீவிரவாதிகளை இந்தியாவுக்குள் எல்லை வழியாக அழைத்து வருகின்றனர்.

சம்பாகத்துவா பகுதி வழியாக சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைய இவர்கள் உதவுகின்றனர். தற்போது கைது செய்யப்பட்டுள்ள தீவிரவாத அமைப்பினர் வெளிநாட்டுத்தீவிரவாதிகளுக்கு தங்குமிடம், உணவு, ஆயுதங்கள் சப்ளைசெய்கின்றனர். மேலும் கைலாச மலையைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளிலும், வனப்பகுதிகளிலும் அவர்கள் நுழைவதற்கும், தங்குவதற்கும் உதவி செய்கின்றனர். இந்த கைலாச மலைப்பகுதிதான் உதம்பூர், கத்துவா, தோடா ஆகிய 3 மாவட்டங்களுக்குள் நுழையும் முச்சந்தியாக உள்ளது.

இவர்களிடம் நடத்திய விசாரணையின்போதுதான் கண்டோ பகுதியில் அண்மையில் நடந்த என்கவுன்ட்டரில் 3 வெளிநாட்டுத் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்பது தெரியவந்தது" என்றார்.


கனம் உட்கோட்ட நடுவர்
மற்றும் வருவாய் கோட்டாட்சியர்
சங்ககிரி. சி.ப. 679 / 2023

ராஜமாணிக்கம், த/பெ.மோல்ரகன்,
72/3, சடையம்பாளையம்,
கோணசமுத்திரம் கிராமம்,
எடப்பாடி வட்டம்,
சேலம் மாவட்டம்.

...மனுதாரர்

/எதிராக/

வட்டாட்சியர், எடப்பாடி.

...எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாயார் கோவிந்தம்மாள், க/பெ.மோல்ரகன் கடந்த 17.12.2017 - ல் சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கோணசமுத்திரம் கிராமத்தில் உள்ள தன்னுடைய வீட்டில் இறந்ததை எதிர் மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்திரவிட கோரி மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபனைகள் இருந்தால், இவ்விளம்பரம் செய்த 15 தினங்களுக்குள்ளாக மேற்படி கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

/நீதிமன்ற உத்தரவுப்படி/
M.ராஜீ,B.A.,B.L.,
வழக்கறிஞர், சங்ககிரி.



## தனேஜா ஏரோஸ்பேஸ் அன்ட் ஏவியேஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம்: பெலகொண்டபள்ளி கிராமம், தளி சாலை, தேன்கனிக்கோட்டை
பெலகொண்டபள்ளி 635 114, தமிழ்நாடு
Phone/ Fax: 04347-233508/ 233414; Email: secretarial@taal.co.in
Website: www.taal.co.in; CIN: L62200TZ1988PLC014460

## அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம், 2013—ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழ் கட்டமைக்கப்பட்ட விதிகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்), 2015 மற்றும் முறையே 5 மே, 2020, 8 ஏப்ரல், 2020, 13 ஏப்ரல், 2020, 13 ஜனவரி, 2021, 05 மே, 2022 மற்றும் 28 டிசம்பர், 2022, செப்டம்பர், 2023 (பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள்) தேதியிட்ட எம்சிஏ பொது சுற்றறிக்கை எண். 20/2020, 14/2020, 17/2020, 2/2021, 2/2022 மற்றும் 10/2022 ஆகியவற்றுக்கு இணங்க, ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்களின் நேரடி பங்கேற்பு இல்லாமல், தனேஜா ஏரோஸ்பேஸ் அன்ட் ஏவியேஷன் லிமிடெட்டின் (நிறுவனம்) 35வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) செப்டம்பர் 06, 2024 வெள்ளிக்கிழமை மதியம் 12:00 மணிக்கு காணொளி காட்சி (VC) / பிற ஆடியோ காட்சி முறை (OAVM) மூலம் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் கீழ், அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனி/வைப்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்பட்டு வருகிறது. உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் VC/OAVM மூலம் பங்கேற்கலாம்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்கள் மீது உறுப்பினர்கள் அவர்களின் வாக்குகளை அளிக்க தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதியை கம்பெனி வழங்குகிறது. மேலும், வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு (e-voting) வசதியையும் கம்பெனி வழங்குகிறது. மின்னணு வழிமுறையில் வாக்களிப்பதன் மூலம் அலுவல் பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும். தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் மின்னணு வாக்களிப்பு தொடர்பான விரிவான வழிகாட்டுதல்கள் உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வரும் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

சட்டப்பிரிவு 103ன் கீழ், VC/OAVM வசதி மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள் குறைந்தபட்ச எண்ணிக்கைக்காக கணக்கிடப்படுவார்கள்.

அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.taal.co.in மற்றும் பிஎஸ்இ இணையதளம் www.bseindia.com மற்றும் NSDL இணையதளம் evotingindia.nsdl.com—ல் கிடைக்கும்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவற்றை பெறுவதற்காக காகித வடிவில், அத்துடன் மின்னணு வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் மற்றும் கம்பெனி/வைப்பாளர்களிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்கள், கம்பெனி பதிவாளரும், பங்கு மாற்று முகவருமான பிக்ஷேர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின் investor@bigshareonline.com அல்லது கம்பெனியின் secretarial@taal.co.in—ல் அவர்களின் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் VC/OAVM மூலம் பங்கேற்பது மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் மின்னணு வாக்களிப்பு குறித்த வழிகாட்டுதல்கள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு செப்டம்பர் 03, 2024 (காலை 9.00 மணி) அன்று துவங்கி செப்டம்பர் 05, 2024 (மாலை 5.00 மணி) அன்று முடிவடைகிறது. செப்டம்பர் 05, 2024 அன்று மாலை 5.00 மணிக்கு பின்னர் தொலைதூர மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்படமாட்டாது. கட்ஆப் தேதியில் அதாவது ஆகஸ்ட் 30, 2024 அன்று உறுப்பினர்கள் பதிவேட்டில் அல்லது வைப்பாளர்களால் பராமரிக்கப்படும் நன்மைபயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர் இடம்பெற்றுள்ள நபர் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு வசதியை பெறத் தகுதியுடையவர் ஆவார்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பை அனுப்பிய பின்னர் கம்பெனியின் உறுப்பினர்களாகும் நபர்கள், உள்நுழைவு முகவரி (login ID) மற்றும் கடவுச்சொல்லை (password) பெறுவதற்கு investor@bigshareonline.com அல்லது secretarial@taal.co.in—க்கு எழுதலாம்.

ஒரு உறுப்பினர் தொலைதூர மின்னணு வாக்களிப்பின் மூலம் தனது வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்திய பிறகும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்.

வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு வசதி கிடைக்கும்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அது குறித்து, www.evotingindia.com—ல் உதவிப் பிரிவில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவு ("FAQs") மற்றும் மின்னணு வாக்களிப்பு பயனர் கையேட்டை பார்க்கவும் அல்லது helpdesk.evoting@cdslindia.com—க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

தனேஜா ஏரோஸ்பேஸ் அன்ட் ஏவியேஷன் லிமிடெட்டுக்காக
அஸ்வினி நவ்ரே
கம்பெனி செயலாளர்

இடம்: புனே
தேதி: ஆகஸ்ட் 14, 2024